**இழப்பீட்டுக்கான அலுவலகம் - 2023**

------------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர்31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து,அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,சபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அலுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்குஉள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அலுவலகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அலுவலகத்தின் ஆளுகை சபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் குறித்தொதுக்கப்பட்ட அதிகாரத்துடன் கூடிய சொத்துக்களுக்கு மாத்திரம் அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக திட்டமிடப்பட்ட” உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவனத்தினால் பேணிச் செல்லல் அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| உரிய நியமத்துடன் தொடர்பும் இணக்கமின்மையும் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்தி 70 இற்கு இணங்க நிறுவனத்தினால் நடைமுறை மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் என நிதி நிலைமைக் கூற்றின் முகப்பில் தனியாக வகைப்படுத்திக் காட்டப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டு நிதிக் கூற்றில் குறுகிய கால முதலீடுகள்ரூபா 6,000,000 தொகை நீண்டகால முதலீடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறை அல்லாத சொத்துக்களில் நீண்டகால முதலீடுகளின் பெறுமதி அந்தத் தொகையினால் மிகையாகவும் நடைமுறை சொத்துக்களில் குறுகிய கால முதலீடுகளின் பெறுமதி அந்தத் தொகையினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் அடங்கியுள்ள நிதி நிலைமை கூற்றுக்குரிய வகைப்படுத்தல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதில் அடங்க வேண்டிய பெறுமதிகளை கணிக்கும் போது ஏற்பட்டிருந்த வழுக்கள் 2024 ஆண்டின் போது குறிப்பிட்ட வகைப்படுத்தலில் உரிய பெறுமதிகள் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் 70 ஆம் பந்திக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஜனவரி மாதம் 12 ஆம் திகதிய உயர்நீதிமன்ற கட்டளையின் படி உயிர்த்த ஞாயிறு தாக்கம் காரணமாக அடிப்படை உரிமைகளை இழந்தவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட நட்டஈடு செலுத்தும் நிதியத்திற்காக அரச பங்களிப்புத் தொகை என கிடைத்திருந்தரூபா ஒரு மில்லியன் தொகை நிதிச் | உயர்நீதிமன்ற கட்டளையின் படி பாதிக்கப்பட்டோர் நிதியத்திற்காக ரூபா ஒரு மில்லியனுக்கான தொகை அரச பங்களிப்புக்காக மேலதிக ஏற்பாடொன்றென தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் இழப்பீட்டுக்கான அலுவலகத்திற்கு | மீளாய்வாண்டிற்குரிய வருமானங்கள் மற்றும் செலவுகள் மாத்திரம் சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், ஆண்டிற்குரிய நிறுவனத்தின் உரிமைகள் மற்றும் காசு மீதி நிதி நிலைமைக் |

| | | | |
|---|---|---|---|
| | செயலாற்றுகைக் கூற்றில் வருமானத்தின் கீழ் மீண்டுவரும் மானியங்கள் எனவும், அதனை பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியத்திற்கு மாற்றுதல் நிதிச் செயலாற்றல் கூற்றில் செலவுகள் எனவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் முறையே நிதிச் செயலாற்றல் கூற்றில் மீண்டுவரும் மானியம் மற்றும் செலவுகள் அந்தப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. மேலும் ரூபா ஒரு மில்லியன் தொகை மற்றும் நீதிமன்றக் கட்டளையின் படி பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் கிடைத்திருந்த ரூபா 35,825,588 இற்கான பணம் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக தனியாக கணக்கு ஏடுகள் பேணிச் சென்ற போதிலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் அந்த கொடுக்கல் வாங்கல்கள் காட்டப்பட்டிருக்கவில்லை. அதற்கு மிகையாக 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதியத்தின் மீதித் தொகை ஆகியரூபா 2,894,838 தொகை நிதி நிலைமைக் கூற்றில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதியம் மற்றும் காசு மீதியில் பதியப்படாமையால் நிதி நிலைமைக் கூற்றில் உரிமைகள் மற்றும் காசு மீதி அந்தப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த ஏற்பாடுகள் உரிய முறையில் இழப்பீட்டுக்கான அலுவலகத்தினால் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் உட்படுத்தப்பட்டு மாதாந்தம் கட்டுநிதி விண்ணப்பிக்கும் போது அந்த ரூபா ஒரு மில்லியன் தொகை தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பரிந்துரை மீது திறைச்சேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் மூலம் இழப்பீட்டுக்கான அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. மேலதிக ஏற்பாடொன்று பெறல் மற்றும் அத் தொகையை அரச செலவுகள் என மேற்கொள்ளப்பட்டதற்குரிய உரிய முறையில் கணக்குகள் மூலம் கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. 2023 ஆண்டின் இறுதிக் கணக்குகள் மூலம் குறிப்பிட்ட வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், 2024 ஆண்டு முதல் இந்த நிதியம் இறுதிக் கணக்குகளுடன் சீராக்கல் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பேன். | கூற்றில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2019 ஆண்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான நட்டஈடு வழங்கும் போது நட்டஈடு பெறுவோன் ஒருவருக்கு மிகையாக செலுத்தியிருந்த ரூபா 300,000 தொகை மற்றும் ரூபா 112,900 தொகை பெறுமதியான காகிதாகிகள் இருப்பொன்று காணாமல் போதலுக்கான முழு நட்டத்தையும் ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்ததுடன், இந்த பதிவழித்தலை மீளாய்வாண்டின் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் படி ஆண்டிற்கான செலவுகள் அதே வருடத்தில் நடைமுறை ஆண்டின் செலவுகள் என இறுதிக் கணக்குகளின் மூலம் சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்கான செலவுகள் சரியாக கணக்கீடு செய்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

நிதிச் செயலாற்றல் கூற்றில் செலவொன்றென பதியப்படாமல் திரண்ட நிதியத்திலிருந்து கழித்திருந்தமையால் நிதிச் செயலாற்றல் கூற்றில் ஆண்டிற்கான செலவுரூபா 412,900 தொகை குறைவாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| i. பந்தி 264 | மீளாய்வாண்டின் போது 362 பாதிக்கப்பட்டோருக்கு காசோலைகள் மூலம் ரூபா 547,526,491 இற்கான தொகையொன்று மற்றும் நேர் அனுப்புதல்களின் மூலம் 5,430 பாதிக்கப்பட்டோருக்கு ரூபா 786,977,664 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட பணம் பெறுவோனுக்கு கிடைத்தமைக்கான உறுதிப்படுத்தியிருக்கவில்லை . | அனைத்து கோப்புக்கள் தொடர்பாகவும் குறிப்பிட்ட கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கு முன்னர் உரிய வங்கியின் விபரங்கள் அல்லது தற்போது காணப்படும் விபரங்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தி அனுப்பும் படி குறிப்பிட்ட நலன்பெறுவோருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்படுகின்றது. இதன் மூலம் நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மாத்திரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 264 இற்கு இணங்க செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | பந்தி 371(2)(ஆ) | ஏதேனும் விஷேட கருமம் ஒன்றிற்காக பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 இற்கான உச்சமட்டம் வரை துணை நிமித்தக் கட்டுநிதி வழங்குவதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு இயலும். கருமங்களை நிறைவேற்றும் போது இதனைக் கடைபிடிக்காமல் ரூபா 100,000 ஐ விட கூடிய தொகையொன்று தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அதற்காக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் பதவிநிலை உத்தியோகத்தர்கள் பலருக்கு கூட்டுத்தொகை ரூபா 100,000 அல்லது அதற்கு குறைவான தொகை என நிமித்த துணைக்கட்டுநிதி பகுதிகளாக பெற்றுக் கொண்டு மொத்த நிமித்தக் கட்டுநிதித் தொகைகுறிப்பிட்ட கருமங்களுக்காக பெண் பணிப்பாளரினால் செலவிடப்பட்டிருந்தது. | இந்த நிமித்த துணைக் கட்டுநிதி பெற்றுக் கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுக்காக அங்கத்துவ சபையின் முழுமையான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) இணங்க செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 இலக்கங் கொண்ட சுற்றறிக்கையின் அரச தொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டல் கோவை | | | |
| i. | பந்தி 2.3 | ➢ வழிகாட்டல் கோவையின் படி 2023 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச தொழில் முயற்சிக்கான சுற்றறிக்கை இலக்கம் 01/2021 அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 இலக்கங் கொண்ட் அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ➢ 2023 ஆண்டிற்கான மூலோபாயத் திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டம் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அரச தொழில் முயற்சிக்கான சுற்றறிக்கை இலக்கம் 01/2021 அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 இலக்கங் கொண்ட் அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | பந்தி 3.1 | அங்கு இணைப்பு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருடாந்த அறிக்கையில் குறைந்த அளவு வெளிப்படுத்தப்பட வேண்டிய பகுதிகள் ஆகிய நிறுவனத்தின் தூரநோக்கு மற்றும் பணிகள், தலைவரின் கருத்துரை, பணிப்பாளர் சபை அறிக்கை, கணக்காய்வு முகாமைத்துவ அறிக்கை மற்றும் கடந்த அண்மித்த 10 வருடங்களில் நிறுவனத்தின் நிதி நிலைமை தொடர்பான தகவல்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த அறிக்கையில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள தகவல்கள் எதிர்காலத்தில் உட்படுத்தப்பட்டு தயாரிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 இலக்கங் கொண்ட் அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 13,642,455 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர் மாறாக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,268,441 தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 32,910,896 இற்கான பின்னடைவு ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த பின்னடைவிற்கு மீள் மதிப்பீட்டு மேற்கொள்ளப்பட்ட வாகனங்களின் பெறுமானத்தேய்வு அதிகரித்தல் மற்றும் முன்னைய ஆண்டின் மீள்மதிப்பீட்டு மிகை காணப்படல் பிரதானமான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நட்டஈடு செலுத்துவதற்காக கோப்புகளின் எண்ணிக்கையை சரியாக உறுதிப்படுத்துவதற்காக நட்டஈடு விண்ணப்பிக்கும் கோப்புக்களின் விபரங்கள் | அவதானிப்புக்களை ஏற்றுக் கொண்டதுடன் நேரடியாக கணினி முறைமை ஒன்றின் மூலம் தேவைப்பாட்டிற்கு அமைவாக பெயர் | நட்டஈடு வழங்குவதற்குரிய கோப்புக்கள் முறைப் பிரகாரம் பேணிச் செல்ல வேண்டியதுடன், நட்டஈடு கோறி கிடைக்கக் கூடிய |

| | | | |
|---|---|---|---|
| | அடங்கிய பதிவேடோன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கும் படி வேண்டிய போதிலும் அவ்வாறான பதிவேடொன்று சமர்ப்பிக்க முடியாமல் இருந்தது. 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேலும் நட்டஈடு செலுத்துவதற்கான 8,626 கோப்புக்கள் காணப்பட்ட போதிலும் காலப் பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன், அவற்றில் 4,917 கோப்புக்கள் தொடர்பாக ரூபா 1,802,446,195 இற்கான தொகையொன்று நட்டஈடாக செலுத்துவதற்கு வேண்டியிருந்தருந்த போதிலும் மீதியான 3,709 கோப்புக்களுக்குரிய செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையை மதிப்பீடு செய்திருக்கவில்லை. | பதிவேடொன்று பெற்றுக் கொள்ளக் கூடியவாறு தரவு முறைமையை நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும், காலப் பகுப்பாய்வு படிவத்திற்குரிய தகவல்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. செலுத்தியிருக்காத கோப்புக்களில் தேவையான ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமை, நட்டஈட்டிற்கான உரிமை காணப்படாமை, கோப்புக்கள் மூடப்பட்டிருத்தல் ஆகிய காரணங்களினால் நட்டஈட்டுத் தொகைக்கான மதிப்பீடொன்று சமர்ப்பிக்க முடியாதென அறிவிக்கப்பட்டுள்ளது. | கோப்புக்களை முறைப் பிரகாரம் பதிவேடொன்றில் உட்படுத்த வேண்டும். அதே போல் பாதீட்டு மதிப்பீடு சரியாக தயாரிக்கப்பட்டு உரிய நேரத்தில் ஏற்பாடுகளை பெற்றுக் கொண்டு நட்டஈடு செலுத்துதல் மேற்கொள்ள வேண்டியமையால் செலுத்த வேண்டிய நட்டஈட்டுத் தொகையையும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது நட்டஈடாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,335 மில்லியன் தொகையில் ரூபா 753 மில்லியன் தொகை 2023 ஆண்டில் விண்ணப்பிக்கப்பட்டிருந்த, போராட்டத்தினால் பாதிக்கப்பட்ட நட்டஈடு பெறுவோருக்காக செலுத்தப்பட்டிருந்த போதிலும், முன்னைய ஆண்டுகள் முதல் ஏனைய நட்டஈடுகளுக்காக விண்ணப்பிக்கப்பட்டிருந்த நட்டஈடு பெறுவோருக்காக ரூபா 582 மில்லியன் தொகை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. அதன் படி 2023 ஆண்டிற்கு முன்னர் விண்ணப்பிக்கப்பட்டிருந்த நட்டஈடு பெறுவோருக்கான நட்டஈடு செலுத்தும் போது முக்கியத்துவ அடிப்படை ஒன்று வழங்குதல் ஒப்பீட்டு ரீதியாக குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன், 2022 மே 09 திகதி ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பு காரணமாக தேவைப்பாட்டினை முக்கியத்துவம் எனக் கருதி பாதிக்கப்பட்டோரின் வீடுகளுக்கு ஏற்பட்டிருந்த சேதத்துக்காக நட்டஈடு வழங்குவதற்கு பணிப்பாளர் சபை மற்றும் அமைச்சரவை அங்கீகரித்திருந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. | முன்னைய ஆண்டுகள் முதல் விண்ணப்பித்திருந்த நட்டஈடு பெறுவோர்களுக்கு நட்டஈடு செலுத்தும் போது முக்கியத்துவம் ஒன்று வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது நட்டஈடு செலுத்துவதற்காக காசோலைகள் வழங்கப்பட்ட போதிலும் நாளதுவரை ஆக்கப்படாத தகவல்கள் மீது நட்டஈடு வழங்கப்பட்டிருந்தமையால் 2023 | அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் சிலிப் முறைமை (Slip System) கீழ் ஏற்பட்டிருந்த மதிப்பளிக்கப்படாமையை தடுப்பதற்காக கொடுப்பனவு | குறிப்பிட்ட நலன்பெறுவோரின் நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல்கள் அடிப்படையில் நட்டஈடு செலுத்துதல் பரிந்துரைக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | டிசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நட்டஈடு பெறுவோருக்கு வழங்கியிருந்த காசோலைகளில் ரூபா 39,124,653 தொகை பெறுமதியான 318 காசோலைகள் வங்கியினால் மதிப்பளிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நட்டஈட்டுத் தொகையில் ரூபா 29,818,995 இற்கான எண்ணிக்கையொன்று மீண்டும் அந்த நட்டஈடு பெறுவோருக்கு நேரடி அனுப்புதல் மூலம் வழங்கியிருந்ததுடன், மேலும் ரூபா 9,305,658 தொகை எண்ணிக்கையொன்று புதிய 85 நட்டஈடு பெறுவோருக்கு வழங்கப்பட்டிருந்தது. | மேற்கொள்வதற்கு முன்னர் குறிப்பிட்ட புதிய வங்கி விபரங்கள் அல்லது தற்போது காணப்படும் விபரங்களின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தி அனுப்பும் படி குறிப்பிட்ட நலன்பெறுவோருக்கு கடிதம் ஒன்று அனுப்பப்படுகின்றது. இதன் மூலம் நாளதுவரை ஆக்கப்பட்ட தகவல்கள் மீது மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்தல் மேற்கொள்ளப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஈ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் சித்தரிக்கப்பட்டிருந்த 2022 செப்தெம்பர் முதல் திசெம்பர் வரையான காலப் பகுதிக்குரிய மின்சாரம் மற்றும் நீர் என்பவற்றிற்காககாணாமல் போனவர்களுக்கான அலுவலகத்திடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 737,485 இற்கான தொகையொன்று மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர்ச்சியாக காணாமல் போனவர்களுக்கான அலுவலகத்திடம் குறிப்பிட்ட கோறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இந்த தொகையை கூடிய விரைவில் மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிடப்பட வேண்டிய தொகையை முறைப் பிரகாரம் அறவீடு செய்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 2019 ஆண்டிலன் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான நட்டஈடு செலுத்தும் போது நட்டஈடு பெறுவோர் ஒருவருக்கு மிகையாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 300,000 மற்றும் ரூபா 112,900 தொகை பெறுமதியான காகிதாகிகள் இருப்பொன்று காணாமல் போதல் தொடர்பாக முழுமையான நட்டத்தை பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினர்களிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் படி ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | இதன் முழுமையான நட்டத்தை பொறுப்பு சொல்ல வேண்டியவர்களிடம் அறவீடு செய்வதற்காக ஆரம்ப விசாரணை சபை ஒன்று நியமனம் செய்யப்பட்டு அந்த பரிந்துரையின் படி இந்த நட்டம் உறுதியாக உத்தியோகத்தர்களின் தவறின் காரணமாக ஏற்பட்டிருக்கவில்லை என உறுதிப்படுத்திய பின்னர் அங்கத்துவ சபையின் அங்கீகாரத்தின் மீது கணக்கு ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | இந்த நட்டத்தை அறவீடு செய்தல் தொடர்பாக போதியளவு நடவடிக்கைகள் நிறுவனத்தினால் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2023 செப்தெம்பர் 01 திகதி முதல் இரண்டு வருட காலப் பகுதிக்கான இழப்பீட்டுக்கான அலுவலகத்தில் ''பணிப்பாளர்'' பதவிக்காக இரண்டாம் நிலை அடிப்படையில் கீழ் முறையான ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையொன்றிற்கு புறம்பாக பெண் உத்தியோகத்தர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் வெளி அல்லது உள் விண்ணப்பதாரி ஒருவர் பணிப்பாளர் பதவிக்கு சேர்க்கப்பட்டிருந்தால், மாதாந்தச் சம்பளம் மற்றும் அனைத்து படிகளாகரூபா 163,055 தொகை செலுத்த வேண்டியிருந்த போதிலும், இரண்டாம் நிலை அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த பெண் உத்தியோகத்தருக்கு மாதாந்த சம்பளம் மற்றும் அனைத்து படிகளுமாக ரூபா 201,474 தொகை செலுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 38,419 இற்கான மேலதிக செலவொன்று மேற்கொள்ள நேரிட்டிருந்தது. பணிப்பாளர் பதவிக்காக சேர்க்கப்பட்டிருந்த இந்த பெண் உத்தியோகத்தருக்கான கடமைகள் மேற்கொள்வதற்கு கடமை அட்டவணை ஒன்று வழங்கப்பட்டிருக்காததுடன் கடமைகள் நிறைவேற்றுதல் தொடர்பாக போதியளவு செயலாற்றுகை ஒன்றும் ஏற்பட்டிருக்கவில்லை. | ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் படி பணிப்பாளர் பதவிக்கான அடிப்படை சம்பளம் ரூபா 74,005 தொகை ஆகக் காணப்பட்டதுடன், மொத்தச் சம்பளம் ரூபா 104,085 தொகை என பகிரங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் படி மற்றும் 13 ஆவது பின்னிணைப்பின் படி இரண்டாம் நிலை அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த பெண் உத்தியோகத்தரின் மாதாந்த இணைந்த சம்பளத்தின் 25 சதவீதம் தொகையொன்று விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு 25 சதவீதமொன்று நிறுவனத்தினால் செலுத்தப்படுகின்றது. மேலும் பணிப்பாளர்களினால் நிறுவனத்தினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அனைத்து நிருவாக/ நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் பரிந்துரை மற்றும் அங்கீகாரம் வழங்குவதுடன், நியதிச் சட்ட அதிகாரங்களும் செயற்படுத்தப்படுகின்றது. | முறையான ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறை ஒன்றின் படி உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் எண்ணிக்கை 77 ஆகக் காணப்பட்டதுடன் உள்ளவாறான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 50 ஆகக் காணப்பட்டமையால் 06 பதவிகளில் 27 வெற்றிடங்கள் காணப்பட்டது. | வெற்றிடமாக காணப்பட்ட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கான தேவைப்பாடுகள் தொடர்பாக தொடர்ச்சியாக அமைச்சுச் செயலாளர் மூலம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், 2023 திசெம்பர் 12 மற்றும் 20 திகதிகளில் 05 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் நேர்முகப் பரீட்சைக்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | ஆக்கபூர்வமான சேவை மட்டமொன்றினை பேணிச் செல்வதற்காக பதவியணி மீளாய்வொன்று மேற்கொண்டு அதன்படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |